டிராக்டர் பயிற்சி நிலையம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்த மாநிலத்தில் டிராக்டர் பயிற்சி நிலையம் ஏதும் தொடங்கப் படவிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இம்மாநிலத்தில் டிராக்டர் பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்குவது பற்றி மத்திய சர்க்காருடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.

Tourist Development Corporation

* 203. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Tourist Development Corporation have arranged for any Musical and Classical Dance performances on fixed days in ten months for the benefit of Tourists in Madras; and

(*b*) if so, the details thereof ?

சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக 10 மாதங்களில், முடிவு செய்த சில நாட்களில் மட்டும் இசை நிகழ்ச்சி, கிராமிய நடனம் ஆகியவற்றைச் சென்னை மாநகரில் நடத்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.